# இரணியன் வதைப்படலத்தில் வைணவக் கோட்பாடு

**உதவிப் பேராசிரியர் சி.ஆர்.மஞ்சுளா** [1]
Assistant Professor C.R.Manjula[1]

**Abstract**

The destruction of Hiranyan occurs in the Third sub section of the Sixth Canto of the Ramayana called Yuddha Kandam. It is called Ramayana in miniature which proposes the Philosophy of Surrender, the crux of Vaishnavam. Chanting of the Eight Letter Manthra 'Om Namo Narayanaya' was the vital force for Prahalathan which explains the five Manifestations of the Lord Narayana. The renowned Poet Kamban through the exposition of this destruction of Hiranyan, is of the view that becoming a dedicated devotee and surrender of one's self unto Lord Vishnu makes the Soul to sublime heights. This Paper probes into how Lord Vishnu comes down from this heavenly abode to protect a staunch Devotee who is absolutely at his lotus feet at all times. This concern of the God is the fundamental Concept of Vaishnavam.

*Key Words : Ramayana, Philosophy of Surrender, Hiranyan Destruction, Five Manifestations of Vishnu, Eight Letter Manthra*

### முன்னுரை

கவிச்சக்கரவர்த்தி ஆறு காண்டங்களாகப் பாடிப் பரவசப்பட்ட தனது இராமவதாரத்தைத் திருவரங்கத்தில் ஒரு பிரபவ ஆண்டின் பங்குனி 21ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று, பௌர்ணமி தினத்தில், பங்குனி உத்திரத் திருநாளில் வெளியீடு செய்தார். ஏழு பிரகாரங்களைக் கொண்ட திருவரங்கக்கோயிலில் 'குலசேகரன் திருவீதி' எனப்படும் மூன்றாவது பிரகாரத்தில் உள்ள கருட மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள தன் குலதெய்வமான மேட்டழகிய சிங்கர் சந்நிதியில் ஸ்ரீமந்நாதமுனிகள் திருவோலக்கத்தில் சோழன் முதல் பல அரசர்களின் அவைகளை அணிபெறச் செய்த கம்பனால் அரங்கேற்றம் நிகழ்த்தப் பெற்றது.

அறிஞர்களால் புகழப்படும் ஆறாவது காண்டமான யுத்த காண்டத்தில் அமைந்த மூன்றாவது படலமான புதுமை வாய்ந்த படலம் 'இரணியன் வதைப்படலம்'. குறள் போலச் செறிவால் சிறக்கும் 'இரணியன் வதைப்படலம்' 'சின்ன ராமாயணம்' என்று சொல்லும் அளவிற்கு அமைக்கப்பட்டுள்ளது. திருவெட்டெழுத்தின் பெருமையைப் புலப்படுத்துவதாய், சரணாகதித் தத்துவத்தின் மேன்மையைப் பாராட்டுவதாய்த் திகழ்கிறது படலம். இந்தப் படலத்தில் காணப்படும் வைணவக் கோட்பாடு இங்கு ஆராயப்படுகிறது.

### வைணவம்

தத்துவம் (உண்மை), ஹிதம் (நன்மை), புருஷார்த்தம் (பேறு) ஆகிய மூன்றையும் தெளிவுபடுத்துவது மதம், தரிசனம் அல்லது சமய தத்துவம். 'திருமாலைப் பரம்பொருள் என வழிபட்டு, அவனருளாலே மற்றீண்டு வாரா பெருநெறியிற் சென்று, மக்கள் உய்தலைக் கூறும் நெறி, வைணவ நெறி அல்லது வைணவ சமயம் என்று கூறப்படும்'.1 ஸ்ரீவைணவம் மூன்று தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட நெறி. சித்து, அசித்து, ஈசுவரன் ஆகியவை இணைபிரியா உண்மையாகக் கருதப்படுகிறது.

தொல்காப்பியர் காலத்தில் முல்லை நிலத்திற்குரிய தெய்வமாக விளங்கிய திருமால்

---

[1]The author is a lecturer in the Department of Language, Hindustan Arts and Science College, Tamil Nadu, India.

சங்க காலத்தில் பரிபாடலில் முல்லை நிலம் கடந்த தெய்வமாக வழிபடப்பட்டான். சங்க நூல்கள் 'தமிழ்க் குழந்தையின் கழுத்தில் அணிவது திருமாலின் ஐம்படைத் (சங்கு, சக்கரம், வில், வாள், தண்டு) தாலியே' என்று பகர்ந்துள்ளது. திருமாலை முழுமுதற் கடவுளாக வணங்கும் நெறி வைணவ நெறி. இந்த வைணவ நெறிக்கு ஒத்து இரணியன் படலம் அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

**திருமந்திரம் - தத்துவம்**

மூன்று பதமாகவும் எட்டெழுத்தாகவும் அமைந்துள்ள திருமந்திரம் இறைவனால் வெளியிடப்பட்டதாகும். 'திருமால் தானே திருநாராயணன் என்ற குருவாகவும், நரநாராயணன் என்ற சிஷ்யனாகவும் இருந்து பத்ரிகாசிரமத்திலே வெளியிட்டு அருளியதாலும் திருமந்திரம் எனப் பெயர் பெற்றது.'2 இராமாநுசர் எனப்படும் உடையவர், தமது ஆசாரியரான பெரியநம்பிகளின் கட்டளைப்படித் திருக்கோட்டியூர் நம்பிகளிடம் திருமந்திரத்தின் உட்பொருளைக் கற்க, திருக்கோட்டியூர் சென்றார். பதினெட்டாம் முறை சென்ற பொழுதுதான் திருக்கோட்டியூர் நம்பி திருமந்திரத்தை உபதேசித்தார். ஒருவருக்கும் வெளியிடக்கூடாது என்றும் அப்படி வெளியிடின் நரகம்தான் சித்திக்கும் என்றும் உறுதி பெற்றுக்கொண்டு உபதேசித்தார். ஆனால், உடையவர் கட்டளையை மீறினார். மந்திரத்தை எல்லோருக்கும் உபதேசித்தார். மேன்மை வாய்ந்த மந்திரத்தைக் கம்பநாட்டாழ்வாரும் 'பிரகலாதன்' என்ற பாத்திரத்தின் மூலம் உலகிற்கு வெளியிட்டுள்ளார்.

வேதங்களுக்கும், யாகங்களுக்கும் முடிவு எல்லையாக இருந்து யாவரும் மந்திரத்தை முதன் முதலில் வேதம் கற்பிக்க வந்த ஆசிரியனுக்குப் பிரகலாதன் வெளியிடுகின்றான். பின்னர்,

**'காமம் யாவையுந் தருவது மப்பதங் கடந்தாற்**
**சேம வீடுறச் செய்வதும் செந்தழல் முகந்த**
**ஓம வேள்வியி னுறுபத முய்ப்பது மொருவன்**
**நாம மன்னது கேள்நமோ நாராயணாய,'**

என்று தந்தைக்குக் காட்டுகிறான்.

மேலும், நாராயணாய ; நாராணாம், அயநம்யஸ என்ற முமுட்சுப் படிக்கிணங்க, ஈசுவரனாகிய எம்பெருமான் தன்னை ஒழிந்த நாரமாகிய எல்லா பொருள்கட்கும் ஆதாரமாக இருப்பதோடு, அப்பொருள்கள் ஒவ்வொன்றிலும் எள்ளுக்குள் எண்ணெய் போலும், கரந்த பாலில் நெய்யே போலும் பரி பூரணமாய் வியாபித்துள்ளான் என்பதனைக் குறிக்கின்றது,' என்ற தத்துவத்தைப் பிரகலாதன்,

**'ஓமெனு மோரெழுத் ததனி னுள்ளுயி**
**ராமவ னறிவினுக மறிவு மாயினான்**
**தாமமூ வுலகமுந் தழுவிச் சார்தலால்**
**தூமமுங் கனலும்போற் றொடர்ந்த தோற்றத்தான்,'**

என்கிறான்.

திருமந்திரத்தில் நடுவில் உள்ள 'நம' என்ற பதம், 'எனக்கு யான் உரியவன் அல்லன்; ஈசுவரனுக்கே உரியவன்', என்ற பொருள்படுவதால் தன்னைக் கொல்வதாகக் கூறி நெருங்கும் தந்தையை நோக்கி, அறிவிற் சிறந்தவனான பிரகலாதன் என்னுயிர் உன்னால் கொல்லப்படுதற்கு எளியது அன்று. ஏனெனில் அது இறைவனுக்கு உரியது என்கிறான்.3

எங்ஙனம் ஸ்ரீமந் நாராயணனைக் காட்டிலும் மேலான தெய்வம் வேறு இல்லையோ அப்படியே இத்திருமந்திரத்தைக் காட்டிலும் மேலான வேறு மந்திரம் இல்லை என்பதை,

**'ஆரைச் சொல்லுவ தந்தண ரறுமறை யறிந்தோர்**
**ஓரச் சொல்லுவ தெப்பொரு ளுபநிடதங்கள்**
**தீரச் செய்வினை தேவரும் முனிவருஞ் செப்பும்**
**பேரைச் சொல்லுவ தல்லது பிறிதுமுன் றுளதோ,'[4]**

என்று நுட்பமாக உணர்ந்து வைணவர்களுக்கு மூல மந்திரமான திருவெட்டெழுத்து மந்திரத்தை உயர்த்தியும் பிடித்துள்ளார்.

### திருமாலின் ஐந்து நிலை

எங்கும் பரந்து என்றும் நிலைத்துள்ள பரம்பொருள் எல்லாவற்றையும் கடந்து, எதனுள்ளும் கலந்திருக்கிறார், ஐம்பூதங்களின் பண்பு வடிவமாக உள்ள பரமனுக்கு நிலைகளும் ஐந்து என வகுக்கப்பட்டுள்ளது. 'ஐந்து உருவங்களில் இறைவன் இருக்கிறான்', இந்த வைணவக் கொள்கையில் ஐந்து உருவங்களில் அவன் இருப்பதை மட்டும் சொல்லாமல் அவன் இருக்கும் ஐந்து இடங்களையும் வரையறுத்துக் கூறுகிறது.

பரமபதத்திலும், திருப்பாற் கடலிலும், அவதாரங்களிலும், எங்கும் நிலைத்திருத்தலிலும், வழிபடு நிலையிலும் உள்ளான் என்று ஐந்து நிலைகளை முறையே பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற வடசொல்லால் வணங்கி வாழ்த்துகிறார்கள்.'[5] ஐந்து நிலைகளில் முதலும், கடையும் ஒழிந்த மூன்று நிலைகள் கம்பரால் காண்பிக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது நிலையான வியூகம், பரம்பொருள் திருப்பாற்கடலில் அறிதுயில் கொண்டு அடியார் குறைகளைக் கேட்டும் முத்தொழில் இயற்றியும் மகிழ்கிறார். இந்நிலையை இரணியன் திருமால் கடலில் தனக்கு அஞ்சி ஒளிந்து கொண்டதாகக் கேலி பேசுவதாகக் கம்பர் காட்டுகிறார்.

**'கறங்கு வெஞ்சிறைக் கலுழன்றன் கடுமையிற் கரந்தான்**
**பிறங்கு தெண்டிரைப்பெருங்கடல் புக்கினம் பெயராது**
**உறங்கு வான்'[6]**

என்ற வரிகள் மேற்கூறிய கருத்துக்கு அணி சேர்க்கின்றன.

இறைவனின் அவதாரங்கள் 'விபவம்' என்று குறிக்கப்படும். மண்ணில் அறம் குன்றி மறம் மிகுந்து நிற்கும் பொழுது, அவதாரம் எடுப்பது இறைவனின் இயல்பு. அறத்தை நிலைநாட்டவும், நல்லவரைக் காக்கவும், அல்லவரைத் தேய்க்கவும் அவதரிக்கிறார் கடவுள். நினைத்த பொழுது, நினைத்த இடத்தில், நினைத்த வண்ணம் அவதரிக்க வல்ல சர்வ சுதந்திரன் திருமால் என்கிறது வைணவம். 'அவதாரம் என்னும் சொல்லுக்கு நேர்பொருள் இறங்குதல் அல்லது கீழே வருதல் என்பதாகும். தலைசிறந்த ஆன்மாவாகிய பரம்பொருள், தன் ஒப்பற்ற மாயையின் ஆற்றலால் விளையாட்டாக, முழுமுதல் ஒருமைப் பிடியிலிருந்து பன்மைப் படிக்கு இறங்குகின்றது; எல்லையற்ற, எப்பொழுதும் உள்ள அழியாத் தன்மையிலிருந்து காலம், இடம் முதவியவைகளால் கட்டுண்டு பன்மைத் தன்மைக்கு இறங்குகின்றது. எல்லாம் கடந்து நிற்கும் தன் பண்பை அது எவ்வகையிலும் இழக்காமல் திகழ்கின்றது'[7] அவதார நிலையைக் கம்பர் பிரமன் வாக்கால் விவரிக்கிறார். பரம்பொருளின் அவதாரத் திருவிளையாடல்,

**'தன்னைப் படைத்ததுவுந் தானே யெனுந்தன்மை**
**பின்னைப் படைத்ததுவே காட்டும் பெரும் பெருமை**
**உன்னைப் படைத்தால் நீயென்றா லுயிர் படைப்பான்**
**என்னைப் படைத்தாய்நீ யெனுமிதுவு மேதாமோ,'[8]**

என விளக்கப்பட்டுள்ளது.

அன்பருக்கொரு ஆபத்து எனில் தன் நிலையினின்று இறங்கி வந்து மனமிரங்கி உவந்து அருள்புரியும் அருளாளர் திருமால். அடியவர்களுக்காக எத்தகு இழி பிறவியும் எடுப்பேன் என ஆமையாய் அவதரித்தார். செருக்குற்றவரை அடக்க வாமனனாய் வந்தார். தன்பால் அன்பு கொண்டோருக்கு அறக்கருணை காட்டுவதும், தருமத்தை மதித்து நடக்காதவருக்கு மறக்கருணை புரிவதும் இறைவனின் தன்மை. அணைத்து அருள் காட்டுவது அறக்கருணை; அடித்துத் திருத்தி நல்வழிப்படுத்துவது மறக்கருணை. நரசிங்க அவதாரம் இரணியனுக்கு மறக்கருணை காட்டவும், பிரகலாதனுக்கு அறக்கருணை புரியவும் நிகழ்த்தப் பெற்றது.

அனைத்துலகும் தன்னுள்ளே நிற்க, நெறியால் தானும் அவற்றுள் நிற்கும் பிரானின் நிலையே அந்தர்யாமியாகும்.

**'தன்னுளே யுலகங்க ளெவையுந் தந்தவை**
**தன்னுளே நின்றுதா னவற்றுட் டங்குவான்,'**[9]

என்று தோற்றமும், இறுதியும் அற்ற நிலை மாறுபட்ட தெய்வம் பிரளயகாலத்தில் தான் படைத்த உலகங்களைத் தன்னிடத்தில் லயிக்கச் செய்கிறது.

கீதையின் கருத்துப்படி, 'நான் முழுஉலகத்துக்கும் வித்து'[10] என்ற கருத்திற்கு அணி செய்கிறது கம்பனின் கவிவரிகள்.

**'ஆலமும் வித்துமொத் தடங்கு மாண்மையான்'.**[11]

### புருடகாரம்

திருமாலின் மார்பகத்துறையும் திருமகளின் அருள் பெற்ற பின்னரே திருமாலின் அருளினைப் பெற முடியும் என்பது வைணவக் கோட்பாடு. புருடகாரம் என்பது பரிந்துரை என்றும் வழங்கப்படுகிறது. சேதநர்களாகிய உயிர்கள் இறைவனின் அருளைப் பெற எம்பெருமானிடம் வாதாடுபவள் பிராட்டி என்பதால் அவளைப் பற்றுக் கோடாகக் கொள்ளுதல் நலம். 'உடையவர் திருவரங்கத்தில் பங்குனி உத்திரத்தன்று ஸ்ரீரங்கநாதர் எழுந்தருளிய சமயத்தில் சரணாகதி கத்யம் சாதித்தார்,'[12] என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. திருமகள் அடியார்கள் முக்தியுலகத்துப் பேரின்பத்தை அடைதற்குத் திருமாலிடம் பரிந்துரைத்து நிற்பதை,

**'பூவிற் றிருவை யழகின் புனைகலத்தை**
**யாவர்க்குஞ் செல்வத்தை வீடென்னு மின்பத்தை**
**ஆவித துணையை யமுதிற் பிறந்தாளைத்**
**தேவர்க்குந் தமோயை யேவினர் பாற்செல்ல,'**[13]

என்ற வரிகள் உணர்த்துகின்றன. இவ்வுலகப் படைப்புப் பற்றிக் கூறும் கம்பனின் புலமை தாயாரைப் பலவாறாக வருணிக்கத் தொடங்குகிறது. செந்தாமரைப் பிராட்டி சோதி உருவினளான தூண்டா விளக்குப் போன்றவளாம்; மனம் நிறைந்த இளைய கொழுந்து போன்றவளாம்; உலகங்களையும் உயிர்களையும் ஒழுங்காக ஆதியிற் பெற்றருளியவளாம் என்று போற்றுகின்றது.

### பிரபத்தி

ஆழ்வார்கள் ஆசாரியர்கள் ஆகிய அனைவரும் புகுகின்ற எளிய வழி சரணாகதி எனப்படும் பிரபத்தி மார்க்கம். 'இறைவன் திருவருளை அடைவதற்கு ஞான மார்க்கம், கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம் ஆகிய நெறிகள் உள்ளன. இந்த மார்க்கங்களைக் காட்டிலும் சரணாகதி நெறிதான் சிறந்தது. இந்தப் பிரபத்தி நெறியை, சரணாகதி நெறியை எம்பெருமான் கண்ணன் உபதேசித்து உள்ளான். இதனைத் 'தீதில் நன்னெறி' என்றும், கீதையின் 'செம்மைப் பொருள்' என்றும் கூறுவர்.'[14] இந்த நெறியில் இறைவனைத் தவிர

வேறு உறுதியில்லை என்பவருக்கு இறைவன் தனது அருளால் அறியாமையை ஒழித்து உய்யும்படிச் செய்கிறார்.

மெய்ஞ்ஞானம் பெற்று யாதொன்றையும் வேண்டாது, உள்ளத்து இயல்பாகவே பொங்கும் பரிவினால் இறைவனைச் சரணடைந்த ஞானியான பிரகலாதன் இரணியனையும் சரணடையும்படி வேண்டுகிறான். அப்பொழுது சரணாகதியின் சிறப்பு விளக்கப்படுகிறது. தன்னைச் சரணமடைந்தவர்களின் காமம், கோபம் முதலிய தீய குணங்களை எல்லாம் முழுவதுமாக ஒழிக்கின்ற திருவருட் செயல் சரணாகதியின் பயனாகத் திகழ்கிறது.

**'நின்றவன் தன்னை நோக்கி நிலையது கண்டு நீயும்**
**ஒன்றுமுன் னுள்ளத் தியாது முணர்ந்தநிலை போலுமன்றே**
**வன்றொழி லாழி வேந்தை வணங்குதி வணங்க வேஉன்**
**புன்றொழில் பொலுக்கு மென்றான்..........'[15]**

தஞ்சம் புகுதல் என்ற எளிய நிலைக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை. தன்னிடம் உயிரினங்கள் சரணடைந்தன என்ற ஒரு தகுதிப்பாட்டை வைத்துக்கொண்டு இறைவன் அருள் புரியத் தயாராக இருக்கிறான்.

**பகவானும் பாகவதனும்**

பிரபத்தியை மட்டுமே ஒரு காரணமாகக் கொண்டு எம்பெருமான் சேதனர்களுக்காக அருள்புரியக் காத்துக் கொண்டிருக்கிறார். பாகவதர்களுக்குச் சிறப்புச் செய்ய ஆவலுடன் இருக்கிறார். இங்கு பகவானைவிடப் பாகவதனுக்கு ஏற்றம் கூறப்படுகிறது. தன் தந்தையான இரணியனைத் தன் முன்பு வைத்து நரசிங்கம் அவனது உடலை நகங்களால் கீறி கொடூரமாகக் கொன்றதைக் கண்டும் இறைவனே அடைக்கலம் என்று பிரகலாதன் இருந்ததால், 'அண்டசராசரம் அத்தனையும் ஈன்று எடுத்த அப்பனாகிய பெருமானுக்குப் பிரகலாதன் தந்தையாகி விடுகிறான். சிங்கப் பெருமான் எந்தையே என்று அழைக்கிறார். தன் அடியவனையே அப்பனாக்கிக் கொள்ளும் இச்செயலில் பகவான் பாகவதனுக்குத் தரும் ஏற்றம் புலப்படுகிறது. வைணவ மரபைப்புரிந்துகொண்ட கவியின் பக்தி மாண்பு இது.'[16]

தருமநெறி பிறழாத செயலை உடையவனான பிரகலாதன் மீது அளவு கடந்து அன்பு கொண்டதால், திருமால் தன் தந்தையைக் கொன்றவிடத்தும் வருந்தாமல் இருந்தான். இதனால் பிரகலாதனுக்கு என்ன கைம்மாறு செய்ய முடியும் என்று பகவானே இரங்கி நிற்பது எல்லாம் வல்ல இறைவனும் அடியவர்களின் பக்திப் பெருக்கின்முன் இயலாமை உடையவன் என்பது நிறுவப்படுகின்றது.

'தன் இயலாமையை ஒன்றுக்கு இரண்டு தடவையாகச் சிங்கப்பிரான் புலப்படுத்துகிறார். பகவான் இறங்கி நின்று பாகவதனை மேலேற்றி வைக்கும் இடம் இது. வைணவ மரபின் உயிர்க்கோட்பாடு; சமய நெறியாளர்களின் உயிர்க்கோட்பாடு இது.'[17] தன் அன்பை வெளிப்படுத்தும் இறைவன், இனி பிரகலாதன் குலத்தாரை என்ன குற்றம் செய்த பொழுதும் கொல்லுதல் இல்லை என்று சாதித்தருளினார்.

**பகவத் பாகவத அபசாரம்**

ஆண்டவனுக்குத் தரும் சிறப்பைக் காட்டிலும் அடியவருக்கு மேலும் பல சிறப்புகள் சமய உலகில் தரப்படுகின்றன. 'பகவத் அபசாரம் எம்பெருமான் திருமேனியில் தீங்கு நினைக்கை; பாகவத அபசாரம் அவன் திருக்கண் மலரில் கோலிட்டு அடித்த மாத்திரம்,' 18 என்பது வைணவப் பெருமொழி. இதன்படிப் பக்த பிரகலாதனுக்கு அபசாரம் நிகழ்கையில் தூணிலிருந்து பிளந்து கொண்டு திருமால் அவதரிக்கிறார். இரணியன் திருமாலைப் பலவாறாக இகழ்ந்து பேசிய பொழுதும் தோன்றாத நரசிங்கம் தன் பக்தனுக்குத் தீங்கு

விளைவிக்கும் பொழுதும், தன் பக்தனின் நம்பிக்கையை நிறுவுவதற்காகவும், தன் பக்தனின் சொல்லை மெய்ப்பிக்கவும் அந்தர்யாமியான கடவுள் வெளிப்படுகிறார்.

### திருமாலே பரம்பொருள்

அனைத்துச் சமயத்தவரும் தாம் சார்ந்த சமயத்தின் கடவுளரை ஏற்றிப் போற்றுதல் மரபு. கம்பரும் அதற்கு விதிவிலக்கல்ல. சாங்கியம், யோகம் அறிந்தவர்கள் அறியக்கூடிய பரமாத்மாவைப் பிரமாணங்களாலும், அறிவாலும், உபநிடதங்களாலும் அளந்திட முடியாத பரம்பொருளை,

**'முக்கட் வேடனும் நான்முகத் தொருவனு முதலா**
**மக்கட் காறுமிம் மந்திர மறந்தவ ரிறந்தார்,'**[19]

என்கிறார் கம்பநாட்டாழ்வார்.

தீக்குணம் இல்லாதவனான திருமாலே பரம்பொருள். நெற்றிக் கண்ணனான சிவன் முதலிய தேவர்கள் தாமே பரத்துவம் என்று கூறினாலும் அவர்கட்கு அத்தன்மை சித்தியாது. அந்த நிலையை அருளுபவனும் திருமாலே ஆவான். அடியவர்களின் கண்களுக்குக் காட்சியளிக்கும் பரமன் நம்பிக்கை இழந்தவரிடம் செல்வது இல்லை. இந்த நிலையை வேதம்,

**'மூன்றவன் குணங்கள் செய்கை மூன்றவ னுருவமூன்று**
**மூன்றுகண் சுடர்கள் சோதி மூன்றுவ னுலக மூன்று**
**தோன்றுலு மிடையு மீறுந் தொங்கிய பெருங்கட் கெல்லாஞ்**
**சான்றவ னிதுவே,'**

என ஓதி ஒலிக்கிறது. கம்பனது 'வைணவம்' திருமாலின் அழகிலும், ஆற்றலிலும், கல்யாண குணங்களிலும் ஈடுபட்டு அவரை ஆழ்வாராக்கி உயர்த்தி விடுகிறது என்பது மிகையாகாது.

### நிறைவுரை

இராமாயணக் காப்பியம் நிகழும் காலத்திற்கு முன்பு நிகழ்ந்த 'இரணியன் வதைப்படலம்' கட்டமைப்பு நிலையிலும், பொருண்மை நிலையிலும் காப்பியத்தோடு ஒன்றி நிற்கிறது. இலங்கையானது அனுமானால் நெருப்புக்கு இரையாக்கப்படுகிறது. இதனால், இராவணன் தன்னைச் சார்ந்தவர்களை அழைத்து 'என்ன செய்யலாம்?' என்று ஆராய்கிறான். வீடணன் 'இரணியன் திருமாலால் அழிக்கப்பட்டான்' என்று இராவணனுக்கு உரைக்கிறான்.

உரையின் விரிவாக 'இரணியன் வதைப்படலம்' தோற்றம் பெறுகிறது. இதன் முந்திய படலத்தின் இறுதியில் இரணியன் பற்றிய குறிப்பும், இதன் அடுத்த படலத்தின் தொடக்கத்தில் இரணியன் கதைகேட்ட இராவணன் உணர்ச்சியும் சுட்டப்படுகிறது. இரணியன் வதைப்படலம் என்பதற்கு இரணியனது வதையைப் பற்றிக் கூறும் பாகம் என்பது பொருள். இரணியன் கதைப்படலம் என்று சில பிரதியில் இப்படலத்திற்குப் பெயர் காணப்படுகிறது.

'இரணியப்படலம் ஒன்று தவிர ஏனைக் கம்பராமாயணம் முற்றும் அழிந்து விட்டாலும் பெரிதன்று, கம்பருடைய கவித்திறமையினையும் இயற்கைப் புலமையினையும் காட்ட இப்படலம் ஒன்றே போதிய சான்றாகும்.'[21]

அரிச்சுவடியில் தொடங்கும் ஆரம்பக் கல்வி அரியின் சுவட்டினைக் காட்டுவதில் அமைதியுறும் என நம்பும் பக்தனுக்கும் தானே அனைத்துமான கடவுள் என ஆணவம் கொண்ட அரசனுக்கும் இடையில் நடக்கும் போராட்டத்தை ஆசிரியர் புகன்றுள்ளார்.

உலக உயிர்களுக்கு என்றும் உண்மையான பொருளாய் விளங்கும் பரம்பொருளை வைணவம் 'திருமால்' என்று வணங்கி வழிபடுகின்றது.

அருவமாகப் பரம பதத்தில் திருவோலக்கத்தில் இருக்கும் இறைவன், பக்தர்களுக்காக அந்த நிலையிலிருந்து படிப்படியாக இறங்கி அர்ச்சாவிக்கிரகம் வரை வடிவு கொள்கிறான். இந்த ஐந்து நிலைகளில் பரம், அர்ச்சை ஒழிந்த ஏனைய மூன்று நிலைகளைக் கம்பர் காட்டியுள்ளார்.

அடியவர் குறை கேட்கும் உள்ளம் அறிதுயில் புரியும் விபவம், ஜீவாத்மாக்களின் பிறப்புப் போன்று கரும சம்பந்தத்தால் உண்டாகாத அவதாரம், வைணவத்தின் சிறப்பு அம்சமான அந்தர்யாமி ஆகியன விளக்கப் பெற்றுள்ளன.

இறைவனுக்கு அடிமையாவதும், அவன் அடியவனுக்கு அடிமையாவதும் பெருமை தரக்கூடிய செயலாகும். அவன் அருளால் அவன் தாள் வணங்குதல் நிகழ்கிறது; பிரகலாதன் பக்தி மணக்கிறது. பக்தியால் நம்பிக்கையால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை என்பதும் பக்தர்களைக் காக்கும் பொருட்டு இறைவன் எவ்வாறாயினும் அருள் புரிவான் என்பதும் சுட்டப்பட்டுள்ளது. மோட்சத்திற்கான மேலான வழி பிரபத்தி என்பதும் அதில் அடியவர்களை இட்டுச் செல்லும் பொறுப்பு திருமகளுடையது என்றும் விளக்கும் கவிச்சக்கரவர்த்தி பரம்பொருள் பான்மையைப் பேசிப் பேசிப் பரவசித்தாழ்கிறார்.

## Biblography

Kambar. KamparâmâyaGam.
Karuthiruman, P.,G. (1963). Kampan. Chennai: Tamil Puthakalayam.
Kiiran, Pulavar. (2010). IrâmâyaGak Ka7añciyam. Chennai: Vanathi Publication.
Pandurangan, A. (1989). Kâppiya Nôkkil KamparâmâyaGam. Chennai: New Century Book House.
Patmavathi, R. (1999). Va7am Tarum VaiGavam. Chennai: Vanathi Publication.
Swami Sitpavananthar. (1992). Srîmat Pakavatkîtai. Thiruchirapalli: Sriramakrishna Thabovanam.
Thirumanam Selvak Kesavaraya Muthaliyar. (1902). Kampanâmâr. India.